செ.வெ.எண்: 30 நாள்: 10.03.2017

# பத்திரிகைச்செய்தி

## வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு (ஆண் / பெண் இருபாலர்) வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுதல்

புதுக்கோட்டை மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,TNSRLMமற்றும் புதுவாழ்வுத் திட்டம் வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 18 முதல் 35 வயது வரை உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு (ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும்) தனியார் தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்கிட இரண்டாம் கட்டமாக அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி மற்றும் கறம்பக்குடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற ஆண் மற்றும் பெண் இருபாலரும் பயன்பெறும் வகையில் **ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில்மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 17.03.2017** அன்று காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதால் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்கள் உரிய மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் பட்டியல், சாதி சான்றிதழ்,ஆதார் அட்டை,குடும்ப அட்டை(Ration Card), புகைப்படம் மற்றும் தொழிற்பயிற்சி தொடர்பான சான்றிதழ்களுடன் கலந்து கொள்ளவும் மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களும் பங்கு பெற்று இளைஞர்களை வேலைக்கு தேர்வு செய்து கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட ஆறு ஒன்றியங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் பொருட்டு அனைத்து தனியார் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு முகாமில் பங்கு பெற்று இருபாலருக்கும் (ஆண் மற்றும் பெண்) வேலை வாய்ப்பு வழங்கிட மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**